Département de la formation,
de la jeunesse et de la culture

# கண்டோன் வௌட்டிலுள்ள (Canton of Vaud) பெற்றோர்கள் மற்றும் கல்வி நிபுணர்களுக்கான தகவல் - கொரோனா வைரஸ் (கோவிட் -19)

## தகவல் இற்றைப்படுத்தல்

கல்வி நிறுவனங்கள், பள்ளிகள் மற்றும் குடியிருப்பு பராமரிப்பு நிறுவனங்கள் பாலர் கல்வி மற்றும் பாடத்திட்டம் சாராத தினப்பராமரிப்பு மையங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்த

வலைப்பக்கம் சூழ்நிலையின் பரிணாமத்திற்கு ஏற்ப புதுப்பிக்கப்படுகிறது. [Consulter la version française](#).

ஆகஸ்ட் 31 பதிப்பு மாலை 3:25 மணிக்கு

# <u>கட்டாய கல்வி:</u>

## ஆகஸ்ட் 24 முதல் கட்டாய பள்ளிப்படிப்பு எவ்வாறு இருக்கும்?

தற்போது நிலவும் சூழ்நிலைகள் மத்தியிலும், பொதுவாக முடிந்தவரை இயல்பாக. சுகாதார நிலைமை நம்மை ஒரு முழு வகுப்பாக மீண்டும் தொடங்க அனுமதிக்கிறது; அரை நாள் வகுப்புகள் மற்றும் தொலைதூரக் கல்வி போலல்லாமல், இது குறிப்பாக சமூக உறவுகள் மற்றும் சம வாய்ப்புகளுக்கு பயனுள்ளது.

மேலும் தகவல்:

- Communiqué de presse du 18 août 2020 ஆகஸ்ட் 18, 2020 இன் செய்தி வெளியீடு

## குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு என்ன நடக்கும்?

ஆசிரியர்கள் முதல் வார பாடங்ககளின் பொது, ஒரு மதிப்பீட்டை அமைக்கிறார்கள். ஒவ்வொரு குழந்தைக்கும் பெற்றோரிடம் ஒரு பொதுமதிப்புரை வழங்கப்படும். தேவைப்பட்டால், தரவு இடைவெளிகளை நிரப்ப, தனிப்பட்ட அல்லது கூட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

# வௌட் (Vaud) கல்வி ஸ்தாபனங்களில் எவ்வாறாக நடந்துக்கொள்ள வேண்டும் ?




அடிப்படை ஆலோசனைகள் அனைத்து மாணவர்களுக்கும் பயிற்சி இடங்களில் இருக்கும் அனைத்து பணியாளர்களுக்கும் நினைவூட்டப்படுகின்றன. அவை அதிகாரப்பூர்வ ஓஎஃப்எஸ்பி (OFSP) சுவரொட்டி வழியாக அனைத்து நிறுவனங்களிலும் இவ்வாறு காட்டப்படுகின்றன:

- சோப்பு மற்றும் தண்ணீரில் உங்கள் கைகளை தவறாமல் மற்றும் முற்றிலுமாக கழுவ வேண்டியது அவசியம்;

- கைக்குலுக்குதல்களை தவிர்க்கப்பட வேண்டும்;
- ஒருவருக்கொருவர் இடையே உள்ள இடைவெளித்தொலைவை பேணுதல் அவசியம் / நெருங்கிய உடல் தொடர்பைத் தவிர்க்கவும்;
- பெரியவர்கள் அல்லது ஆசிரியர்கள் முகமூடி அணிவது கட்டாயமாகும்;
- • பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் பொதுவான பகுதிகளில், கட்டிடங்களில் மற்றும் வகுப்பறைகளில் நகரும் போது முகமூடியை அணிவது கட்டாயமாகும். வகுப்பில், குறைந்தபட்ச தூரமான 1.5 மீட்டரை மதிக்கும் சூழ்நிலையில், முகமூடியை அகற்றலாம். ஒற்றைப்பயன் அறுவை சிகிச்சை முகமூடிகளை முதலாளி ஸ்தாபனத்தின் மூலம் வழங்குக்கிறார், மேலும் இவை ஒவ்வொரு அரை நாளும் மாற்றப்பட வேண்டும்;
- நீங்கள் ஒரு கைக்குட்டை அல்லது உங்கள் முழங்கையின் வளைவில் இரும மற்றும் தும்ம வேண்டும்;
- அறிகுறிகள் இருந்தால் (அறிகுறிகள் இருந்தால் கன்டோனல் மருத்துவரிடம் கேட்கவேண்டிய கேள்விகளைப் பார்க்கவும் FAQ du Médecin cantonal), சம்பந்தப்பட்ட பெரியவர்கள் அல்லது குழந்தை வீட்டில் தங்கி, கையாளும் மருத்துவரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

பின்வரும் சந்தர்ப்பங்களில் மட்டுமே மாணவர்கள் முகமூடி அணியவேண்டும்:

- பள்ளியின் சம்பந்தமாக பொது போக்குவரத்தைப் பயன்படுத்தும் 12 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள்;
- மாறுதல் கட்டமைப்புகளில் கலந்து கொள்ளும் சிறப்பு கல்வி நிறுவனங்களின் மாணவர்கள் (மாற்றம் கட்டமைப்புகளால் வழங்கப்பட்ட முகமூடிகள்);
- • பள்ளியில் எல்லா நேரங்களிலும் ஆர் ஏசி I ( RAC I ) மற்றும்ஆர் ஏசி II (RAC II) மாணவர்கள் (நிறுவனங்களால் வழங்கப்படும் முகமூடிகள்) அணியவேண்டும்.

மேலும் தகவல்:

- Décision 178 (PDF, 4,49 Mo): "சுகாதார மற்றும் நிறுவன நடவடிக்கைகள் தொடர்பான பயன்பாட்டுக் கொள்கைகள் ...”
- Site dédié aux conseils et au téléchargement de l’affiche « Nouveau coronavirus : voici comment nous protéger அறிவுரை மற்றும் "புதிய கொரோனா வைரஸ்: நம்மைப் பாதுகாத்துக் கொள்வது எப்படி" என்ற சுவரொட்டியைப் பதிவிறக்குவதற்கு அர்ப்பணிக்கப்பட்ட தளம்

31.08.2020 – மாலை 3:25 மணிக்கு

- விளையாட்டான முறைகளை பயன்படுத்தி, "கொரோனா க்வெஸ்ட்" CoronaQuestஆட்டத்தை ஆன்லைனில் விளையாடுவதன் மூலம் நீங்கள் தடை சைகைகளை வலுப்படுத்தலாம்

## பயிற்சி நிபுணர்களைப் பாதுகாக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?

- செயலறைகளில் ஒளி புகும் பிளாஸ்டிக் பேனல்கள் நிறுவப்பட்டுள்ளன;
- ஆசிரியர்களின் அறைகள் மற்றும் பெரியவர்களுக்கு இடையில் 1.5 மீட்டர் தூரத்தை மதிக்க வேலை இடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒருவர்கொருவர் மாறி மாறி வருகை தருதல்;
- தொழில் வல்லுநர்களுக்கு முகமூடிகள் கிடைக்கின்றன;
- • ஒரு நாளைக்கு ஒரு முறை குப்பைகளை காலி செய்யப் படுகின்றன ;
- ஆஙிலியோகம் ஆசிரியர்களுக்கு பதிலாக மாணவர்களால் செய்யப்பட வேண்டும்;
- பெரியவர்களிடையேயும், குழந்தைகளிடையேயும், பெரியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையேயும் பாத்திரங்கள், உணவு மற்றும் பானங்கள் ஆகியவற்றைப் பகிரப் படக்கூடாது.

மேலும் தகவல்:

- Décision 178 (PDF, 4,49 Mo): "சுகாதார மற்றும் நிறுவன நடவடிக்கைகள் தொடர்பான பயன்பாட்டுக் கொள்கைகள் ..."

## உடற்பயிற்சி கல்வி வகுப்புகள் நடைபெறுகின்றனவா?

ஆம், உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுத் துறையின் (எஸ்ஈபிஎஸ்) directives நெறிமுறைகளின்படி. சுருக்கமாக:

- திறந்த வெளியில் நடவடிக்கைகள் விரும்பத்தக்கது.
- பிடிப்புக்கு உதவும் நங்கூரங்களை பயன்படுத்தும் பயிற்சிகள் தவிர்க்கப்படுகின்றன;
- பிறருடன் தொடர்பு கொள்ளும் விளையாட்டுகள் (மல்யுத்தம், போர் விளையாட்டு) தடைசெய்யப்பட்டுள்ளது;

- ஷவர் மற்றும் உடை மாற்றும் அறைகள் யாவராலும் அணுகக்கூடியவை மற்றும் ஒரு நாளைக்கு ஒரு முறையாவது இவை கிருமி நீக்கம் செய்யப்படுகின்றன.

## பாட்டு பாடும் பாடங்கள் கட்டாய பள்ளியில் நடைபெறுகிறதா?

- 1 பி (1P) - 11 எஸ் (11S)ஸில் உள்ள மாணவர்கள் பாடல் பயிற்சி செய்யலாம்;
- ஆர்.ஏசி (RAC) மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இசை கற்பித்தல் தேவைகளுக்கு ஏற்ப மாற்றி அமைக்க வேண்டும் (பாடுவதைப் பயிற்சி செய்யலாம், ஆனால் 1.5 மீ தூரத்தைக் கவனிக்க வேண்டும்). போதுமான பெரிய அறை இல்லாத நிலையில், பிற வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும் (திறந்தவெளியில் பாடுதல், பெரிய மண்டபம் போன்றவை);
- தூரத்தை கடைக்கொள்ள இயலாது என்றால் ஆசிரியர் தனது முகமூடியை அணிந்துகொள்கிறார் (அவரது சகாக்களைப் போல).

## எந்த சூழ்நிலையில் பொழுதுபோக்குகள் நடைபெறுகின்றன?

அனைத்து மாணவர்களுக்கும் பொழுதுபோக்குக்குரிய கேளிக்கைகள் இயல்பாக நடைபெறுகிறன. பெரியவர்களிடையேயும், குழந்தைகளிடையேயும், பெரியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையேயும் பாத்திரங்கள், உணவு மற்றும் பானங்கள் ஆகியவற்றைப் பகிரப் படக்கூடாது.

மேலும் தகவல்:

- Décision n° 178 (PDF, 4,49 Mo): "சுகாதார மற்றும் நிறுவன நடவடிக்கைகள் தொடர்பான பயன்பாட்டுக் கொள்கைகள் ..."

## வகுப்பறையை விட்டு வெளியேறும்போது, எந்த நிபந்தனைகளின் கீழ் இது நடைப்பெறுகிறது ?

பாடங்களின் முடிவில் வகுப்பறையை விட்டு வெளியேறும்போது, மாணவர்கள் உடனடியாக விளையாட்டு மைதானத்தை விட்டு வெளியேறுகிறார்கள் அல்லது பாடதிட்டத்தைச் சாராத பாட்டு, டான்ஸ் போன்றவற்றில் ஈடுபடுகிறார்கள். பள்ளி நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடாத பெரியவர்கள், உதாரணமாக, தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அழைத்து வரும் பெற்றோர்கள், கட்டிடத்தை சுற்றியுள்ள பகுதியை தவிர்க்க வேண்டும். அதேபோல், பெரியவர்கள் மற்றும் / அல்லது பெற்றோர்கள் பள்ளியைச் சுற்றி கூட்டம் கூடுவதைத் தவிர்க்க வேண்டும். விளையாட்டு மைதானம் அல்லது பள்ளிக்குள் அவசியம் நுழைய வேண்டிய பெரியவர்கள் முகமூடி அணிய வேண்டும்.

மேலும் தகவல்:

- Décision n°178 (PDF, 4,49 Mo): "சுகாதார மற்றும் நிறுவன நடவடிக்கைகள் தொடர்பான பயன்பாட்டுக் கொள்கைகள் ...”

## வகுப்பறைகள் மற்றும் கட்டிடங்கள் ஆகியவற்றில் கிருமி நீக்கம் செய்யப்பட்டுள்ளதா?

வளாகம், மேற்பரப்புகள், மாணவர் களின் மேசை கள் மற்றும் ஆசிரியர்களின் மேசைகளுக்கு ஒரு நாளைக்கு ஒரு முறையாவது வகுப்பறை கிருமி நீக்கம் நடைபெறுகிறது. கதவு அல்லது ஜன்னல் கைப்பிடிகள், சுவிட்சுகள் மற்றும் குழாய்களை ஆகியவற்றிக்கு ஒரு நாளைக்கு இரண்டு முறையாவது அவ்வப்பொழுது கிருமி நீக்கம் செய்ய வேண்டும். வழக்கமாமாக பயன்படுத்தும் தயாரிப்புகளுடன் தளங்கள் வாரத்திற்கு இரண்டு முறை சுத்தம் செய்யப்படுகின்றன.

செயலகங்கள், ஆசிரியர்களின் அறைகள், நூலகங்கள் மற்றும் பிற பொது அல்லது பொதுவான பகுதிகளுக்கான நுழைவாயில்களில் சிறப்பு கூடுதல் கை சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஸ்தாபனத்தில் போதுமானகை கழுவும் தொட்டிகள் இல்லை என்றால், தண்ணீரும் ஆல்கஹாலும் சேர்ந்த கரைசலை  ஒரு பெரியவரின் மேற்பார்வையில் மாணவர்கள் பயன்படுத்தலாம்.

மேலும் தகவல்:

- Décision n°178 (PDF, 4,49 Mo): "சுகாதார மற்றும் நிறுவன நடவடிக்கைகள் தொடர்பான பயன்பாட்டுக் கொள்கைகள் ...”

## கேன்டீன்கள், பாடதிட்டத்தைச் சாராத நிகழ்வுகள் நடக்கும் இடங்கள் மற்றும் மேற்பார்வையிடப்பட்ட வீட்டுப்பாடம் நடக்கும்அறைகள் திறக்கப்பட்டுள்ளதா?

அவைதிறந்திருக்கின்றன ஆனால் குறிப்பிட்ட சுகாதார நடவடிக்கைகள் நடைமுறையில் உள்ளன.

ஆரம்பநிலை  மேற்பார்வையிடப்பட்ட பாடதிட்டத்தைச் சாராத நிகழ்வுகள் நடக்கும் இடங்கள்   ஔன்ஜெஈ’OAJEவெளியிட்ட கண்டோனல் உத்தரவுகளை பயன்படுத்திக்கொள்கின்றன.

மேற்பார்வையிடப்பட்ட வீட்டுப்பாடமும் கட்டாயக் கல்வி போன்ற தொலைதூர மற்றும் சுகாதாரத்தின் பொதுவான விதிகளுக்கு உட்பட்டது.

மேலும் தகவல்:

- Décision n°178 (PDF, 4,49 Mo): "சுகாதார மற்றும் நிறுவன நடவடிக்கைகள் தொடர்பான பயன்பாட்டுக் கொள்கைகள் ...”

## பள்ளி போக்குவரத்து வழக்கம் போல் நடைபெறுகிறதா?

ஆம். பெரியவர்கள் முதலாளியால் வழங்கப்படும் முகமூடிகளை அணிய வேண்டும். கட்டாய பள்ளியில் மாணவர்கள் முகமூடி அணிய தேவையில்லை.

அதே நேரத்தில், பொது போக்குவரத்தில் (வழக்கமான பஸ், ரயில் போன்றவை) 12 வயது முதல் குழந்தைகள் முகமூடி அணிய வேண்டும்

மேலும் தகவல்:

- Décision n°178 (PDF, 4,49 Mo): "சுகாதார மற்றும் நிறுவன நடவடிக்கைகள் தொடர்பான பயன்பாட்டுக் கொள்கைகள் ..."

## ஒரு நபருக்கு (மாணவர் அல்லது ஆசிரியர்) ஒரு வகுப்பறையில் நோயின் அறிகுறிகள் இருந்தால் என்ன செய்வது?

நோயின் அறிகுறி ஏற்பட்டால் (கன்டோனல் மருத்துவரின் கேள்விகளைக் காண்க), FAQ du Médecin cantonal), மாணவர் :

- வகுப்பறையை விட்டு வெளியேறுகிறார்;
- முகமூடியைப் பெறுகிறார்;
- அவர்களின் பெற்றோருக்கு காத்திருக்கலாம் அல்லது வீட்டிற்கு திரும்பலாம் (அவர்களின் வயதைப் பொறுத்து);
- பெற்றோர் குழந்தை மருத்துவர் அல்லது கேன்டன் ஹாட்லைனை தொடர்பு கொள்ளுவார்கள்.

ஆண்/பெண் பாடப் பயிற்சி நிபுணர்:

- வகுப்பறையை விட்டு வெளியேறி தங்களை தனிமைப்படுத்துகிறார்;
- அவரது முகமூடியை அணிந்திருக்கிறார்;
- வீடு திரும்புகிறார்;

- தனது மருத்துவரை அல்லது கேன்டன் ஹாட்லைனை தொடர்பு கொள்கிறார்.

மருத்துவ இரகசியத்தன்மைக்கு மதிப்பளிப்பதன் மூலம் ஒரு மாணவர் அல்லது ஆசிரியர் பரிசோதனையின் முடிவு பள்ளிக்கு அனுப்பப்படுவதில்லை.

## எத்தனை பேர் ஒரே நேரத்தில் ஆசிரியரின் அறைக்கு செல்ல முடியும்?

ஒரே நேரத்தில் ஆசிரியரின் அறையில் இருக்கக்கூடிய நபர்களின் அதிகபட்ச கொள்திறன் அதன் நுழைவாயிலில் தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும், மேலும் இந்த வரம்பை மீறக்கூடாது. , 1.5 மீட்டர் தூரத்தை மதிக்க முடியாத எல்லா நேரங்களிலும், ஆசிரியர்அறைக்குள் நுழையும் ஒவ்வொரு நபரும் பாதுகாப்பு முகமூடியை அணிய வேண்டும்.

## ஆபத்து இருக்கும் நாட்டிலிருந்து திரும்பும்போது என்ன நடத்தையை பின்பற்ற வேண்டும்?

கூட்டிணையரசுகளால் "ஆபத்துள்ளது" என வகைப்படுத்தப்பட்ட ஒரு பகுதிக்கு அல்லது ஒரு நாட்டிற்கு பயணம் செய்து திரும்பும் மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாக மற்றும் தொழில்நுட்ப ஊழியர்கள் எஃப்ஓபிஹ (FOPH) வழங்கிய அறிவுறுத்தல்களை மிகக் கண்டிப்பாக பின்பற்றுகிறார்கள் (ஆபத்து இருக்கும் நாடுகளின் பட்டியல் மற்றும் www.bag.admin.chஇன் கீழ் பின்பற்றப்பட வேண்டிய செயல்முறை). அவர்கள் தங்களைத் தாங்களே தனிமைப்படுத்திக் கொள்கிறார்கள், கன்டோனல் மருத்துவரைத் தொடர்புகொண்டு, இந்த தனிமைப்படுத்தல் முடிவடையும் வரை அவர்கள் தங்கள் நிறுவனத்திற்குத் திரும்புவதில்லை, பின்னர் அவர்கள் எந்த அறிகுறிகளையும் காட்டாவிட்டால் மட்டுமே திரும்புகிறார்கள். ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகள் தனிமைப்படுத்தலின் காரணமாக மாணவர்கள் பள்ளிக்கு வராவிட்டால் அபராதம் விதிக்க மாட்டார்கள்.

மேலும் தகவல்:

- Décision n°178 (PDF, 4,49 Mo): "சுகாதார மற்றும் நிறுவன நடவடிக்கைகள் தொடர்பான பயன்பாட்டுக் கொள்கைகள் …"

# கட்டாயத்திற்கு மேற்படிப்பு கல்வி:

## ஆகஸ்ட் 24 முதல் கட்டாய மேற்படிப்பு பள்ளிப்படிப்பு எவ்வாறு இருக்கும்?

தற்போது நிலவும் சூழ்நிலைகள் மத்தியிலும், பொதுவாக முடிந்தவரை இயல்பாக. ஆகஸ்ட் 24 ஆம் தேதி யாகிய பள்ளி ஆண்டு துவக்கம் மாணவர்கள் தங்கள் ஸ்தாபனங்களில், முழுவதுமாக ஆசிரியர் கொண்ட வகுப்புகளில், அதனுடன் சுகாதார நடவடிக்கைகளுடன், நடைபெறும். குறிப்பாக, இது அரை தரங்கள் மற்றும் தொலைதூரக் கல்வியைப் போலன்றி சமுதாயத்தில் ஏற்படும் பிணைப்புகளையும் சம வாய்ப்புகளையும் ஊக்குவிக்கிறது.

மேலும் தகவல்:

- Communiqué de presse du 18 août 2020ஆகஸ்ட் 18, 2020 இன் செய்தி வெளியீடு
- Décision n°174 (PDF, 414 Ko): நேருக்கு நேர் கற்பித்தல் மற்றும் பரீட்சைகளை ஆகஸ்ட் 10, 2020  முதல் இரண்டாம் நிலை அளவில் ( இரண்டாம் நிலை II இன் கன்டோனல் பாதுகாப்பு திட்டம் 2 - COVID-19) மீண்டும் தொடங்குவதற்கான கட்டமைப்பிற்குள் சுகாதார மிற்றும் நிறுவன நடவடிக்கைகளைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள். “

## குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு என்ன நடக்கும்?

கல்வி மட்டத்தில், பாதி அளவில் கட்டுப்படுத்தல் காரணமாக ஏற்படும் குறைபாடுகளை மேற்கொள்ளுவதற்காக ஆதரவு மற்றும் ஆதரவு நடவடிக்கைகள் ஆகஸ்ட் 24 பள்ளி ஆண்டின் தொடக்கத்திலிருந்து வழங்கப்படுகின்றன.

மேலும் தகவல்:

Département de la formation,
de la jeunesse et de la culture

- Communiqué de presse du 18 août 2020ஆகஸ்ட் 18, 2020 இன் செய்தி வெளியீடு

# வௌட் (Vaud) கல்வி ஸ்தாபனங்களில் எவ்வாறாக நடந்துக்கொள்ள வேண்டும் ?

31.08.2020 – மாலை 3:25 மணிக்கு

Département de la formation,
de la jeunesse et de la culture




அடிப்படை ஆலோசனைகள் அனைத்து மாணவர்களுக்கும் பயிற்சி இடங்களில் இருக்கும் அனைத்து பணியாளர்களுக்கும் நினைவூட்டப்படுகின்றன. அவை அதிகாரப்பூர்வ ஓஎஃப்எஸ்பி (OFSP) சுவரொட்டி வழியாக அனைத்து நிறுவனங்களிலும் இவ்வாறு காட்டப்படுகின்றன:

31.08.2020 – மாலை 3:25 மணிக்கு

- சோப்பு மற்றும் தண்ணீரில் உங்கள் கைகளை தவறாமல் மற்றும் முற்றிலுமாக கழுவ வேண்டியது அவசியம்;
- கைக்குலுக்குதல்களை தவிர்க்கப்பட வேண்டும்;
- ஒருவருக்கொருவர் இடையே உள்ள இடைவெளித்தொலைவை பேணுதல் அவசியம் / நெருங்கிய உடல் தொடர்பைத் தவிர்க்கவும்;
- மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அனைத்து நிர்வாக ஊழியர்களும் கட்டடங்களிலும், ஸ்தாபனத்தின் வெளிப்புற இடங்களிலும் செலவழிக்கும் எல்லா நேரங்களிலும் முகமூடி அணிவது கட்டாயமாகும்;
- ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையே 1 1.50 மீட்டருக்கும் அதிகமாக இருந்தால் மட்டுமே அவர்களின் முகமூடியை அகற்ற முடியும், ஆனால் 1.50 மீ இஇடைவெளியை கடைப்பிடிக்க முடியாவிட்டால், உடனே அதை அணிய வேண்டும். ஒற்றைப்பயன் அறுவை சிகிச்சை முகமூடிகளை முதலாளி ஸ்தாபனத்தின் மூலம் வழங்குக்கிறார், மேலும் இவை ஒவ்வொரு அரை நாளும் மாற்றப்பட வேண்டும்;
- நீங்கள் ஒரு கைக்குட்டை அல்லது உங்கள் முழங்கையின் வளைவில் இரும மற்றும் தும்ம வேண்டும்;
- அறிகுறிகள் இருந்தால் (அறிகுறிகள் இருந்தால் கன்டோனல் மருத்துவரிடம் கேட்கவேண்டிய கேள்விகளைப் பார்க்கவும் FAQ du Médecin cantonal), சம்பந்தப்பட்ட பெரியவர்கள் அல்லது குழந்தை வீட்டில் தங்கி, கையாளும் மருத்துவரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

மேலும் தகவல்:

- Site dédié aux conseils et au téléchargement de l'affiche « Nouveau coronavirus : voici comment nous protéger அறிவுரை மற்றும் "புதிய கொரோனா வைரஸ்: நம்மைப் பாதுகாத்துக் கொள்வது எப்படி" என்ற விளம்பரத்தட்டியைப் பதிவிறக்குவதற்கு அர்ப்பணிக்கப்பட்ட தளம்
- விளையாட்டான முறைகளை பயன்படுத்தி, "கொரோனா க்வெஸ்ட்" CoronaQuestஆட்டத்தை ஆன்லைனில் விளையாடுவதன் மூலம் நீங்கள் தடை சைகைகளை வலுப்படுத்தலாம்

Département de la formation,
de la jeunesse et de la culture

# மேற்படிப்பு பயிற்சி பெறும் மாணவர்கள் மற்றும் மேற்படிப்பு தொழில் வல்லுநர்கள் என்ன சுகாதார விதிகளை கடைபிடிக்க வேண்டும்?

முகமூடி அணிவது மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அனைத்து நிர்வாக மற்றும் தொழில்நுட்ப ஊழியர்களுக்கும் தொழிற்கல்வி பள்ளிகள் மற்றும் உடற்பயிற்சிக் கூடங்களின் கட்டிடங்களிலும், வெளிப்புற இடங்களிலும் செலவழிக்கும் அனைத்து நேரங்களிலும் கட்டாயமாகும்.

குறைந்தபட்சம், ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு தொழில் வல்லுநரும் ஸ்தாபனத்திற்கு வரும்போது மற்றும் வெளியேறும்போதும், அதே போல் ஒவ்வொரு வளாகத்திற்கு மாறும்போதும், பொதுவான உபகரணங்களின் ஒவ்வொரு பயன்பாட்டிற்கும் பிறகும், கைகளை கழுவுகிறார்கள்.

பரிந்துரைக்கப்பட்ட சமூக மற்றும் இடஞ்சார்ந்த தொலைவில் இருத்தல் விதிகள் (ஒவ்வொரு நபருக்கும் இடையில் 1.5 மீட்டர்) பெரியவர்களிடையேயும், பெரியவர்களிடமிருந்தும் மாணவர்களிடையேயும், மாணவர்களிடையேயும், ஆசிரியர்களின் அறைகளிலும் முடிந்தவரை அடிக்கடி கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

பரிந்துரைக்கப்பட்ட அனைத்து சுகாதார விதிகளின் விவரங்களையும் துறைசார் முடிவு எண் 174 இல் காணலாம்.

மேலும் தகவல்:

- Décision n° 174 (PDF, 414 Ko): "இரண்டாம் நிலை மட்டத்தில் நேருக்கு நேர் கல்வியை படிப்படியாக மீண்டும் தொடங்குவதன் ஒரு பகுதியாக சுகாதார மற்றும் நிறுவன நடவடிக்கைகளைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள் (இரண்டாம் நிலை II க்கான கன்டோனல் பாதுகாப்புத் திட்டம் - COVID-19 ) “

31.08.2020 – மாலை 3:25 மணிக்கு

canton de vaud
LIBERTÉ ET PATRIE
Département de la formation,
de la jeunesse et de la culture

## மாணவர்களும் பயிற்சி பெற்றுக்கொண்டிருப்பவர்களும் தங்களிடம் முகமூடிகளை வைத்திருக்க வேண்டுமா மற்றும் அவற்றை அணிய வேண்டுமா?

கட்டாய மேற்படிப்பு பெறும் அனைத்து மாணவர்களும், பயிற்சியாளர்களும் கட்டடங்களிலும், ஸ்தாபனத்தின் வெளிப்புற இடங்களிலும் செலவழிக்கும் எல்லா நேரங்களிலும் முகமூடியை அணிந்து ஒவ்வொரு அரை நாளும் கழித்து அதை மாற்ற வேண்டும். ஆகஸ்ட் 24 பள்ளி ஆண்டு தொடங்கிய முதல் இரண்டு வாரங்களில்உடல்நல காரணங்களுக்காக, அறுவை சிகிச்சை முகமூடிகள் விநியோகிக்கப்படுகின்றன.

செப்டம்பர் 7, 2020 முதல்:

- மாணவர்களும் பயிற்சி பெற்றவர்களும் முகமூடிகளைப் தங்கள் சொந்த செலவில் பெற வேண்டும்;
- பொருளாதார அல்லது சமூக நிலைமை யின் காரணமாக முகமூடிகளைப் பெறுவது சிரமமாக இருந்தால், மாணவர்கள் மற்றும் பயிற்சி பெற்றுக்கொண்டிருப்பவர்கள் தங்கள் நிர்வாகத்தை தங்கள் ஸ்தாபனத்தில் வகுப்பில் இருக்கும் ஒரு நாளைக்கு இரண்டு ஒற்றைப்பயன் அறுவை சிகிச்சை முகமூடிகளை வைத்திருக்குமாறு கேட்கலாம்.

மேலும் தகவல்:

- Décision n°174 (PDF, 512 Ko): நேருக்கு நேர் கற்பித்தல் மற்றும் பரீட்சைகளை ஆகஸ்ட் 10, 2020 முதல் இரண்டாம் நிலை அளவில் ( இரண்டாம் நிலை II இன் கன்டோனல் பாதுகாப்பு திட்டம் 2 - COVID-19) மீண்டும் தொடங்குவதற்கான கட்டமைப்பிற்குள் சுகாதார மற்றும் நிறுவன நிவடிக்கைகளைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள். “

## உடற்பயிற்சி கல்வி வகுப்புகள் நடைபெறுகின்றனவா?

1.5 மீட்டர் இடைவெளியை முறையாகவும், எல்லா நேரங்களிலும் மாணவர்களிடையேயும், மாணவர்களுக்கும் ஆசிரியருக்கும் இடையில் கடைப்பிடிக்கும்

வரை, முகமூடி இல்லாமல் உட்புற விளையாட்டை கற்பித்தல் சாத்தியமாகும். இந்த அர்த்தத்தில், உடல் தொடர்பு (கால்பந்து, கூடைப்பந்து, பந்து விளையாட்டுகள் போன்றவை) சம்பந்தப்பட்ட  குழுவாக ஆடும் விளையாட்டுகளின் பயிற்சி தடைசெய்யப்பட்டுள்ளது.  வழங்கப்பட்ட ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் மூலப்பொருட்கள்  (அறைகலன்கள்) பயனர்களால் கிருமி நீக்கம் செய்யப்படுகின்றன.

சுகாதார காரணங்களுக்காக, அணுக முடியாத ஈரப்பதமான பகுதிகளைத் தவிர்த்து, உடை மாற்றும் அறைகள் உள்ளன.  தாழ்வாரங்களிலும் உடைகள் மாற்றும் அறைகளிலும் முகமூடி அணிவது கட்டாயமாகும்.

### பாட்டு பாடும் பாடங்கள் கட்டாய

## மேற்படிப்பு பயிற்சி பெறும் பள்ளியில் நடைபெறுகிறதா?

பாடும் பயிற்சியைத் தவிர, இசை கற்பித்தல் சாத்தியமாகும்.

## வகுப்பறைகள் மற்றும் கட்டிடங்கள் ஆகியவற்றில் கிருமி நீக்கம் செய்யப்பட்டுள்ளதா?

- ஒவ்வொரு பயன்பாட்டிற்கும் பிறகு வளாகம் காற்றோட்டமாக்க படுகிறது;
- ஸ்தாபனங்கள்  சுகாதார உபகரணங்களுடன் பொருத்தப்பட்டுள்ளன;
- வளாகங்கள், மேற்பரப்புகள், மாணவர் மேசைகள் மற்றும் ஆசிரியர்களின் மேசைகள், சுவிட்சுகள், கதவு மற்றும் ஜன்னல், கை பிடிதண்டுகள், மற்றும் சுகாதார வசதிகள் **ஒரு நாளைக்கு இரண்டு முறை** ஊழியர்களால் சுத்தம் செய்யப்படுகின்றன;
- அறையை விட்டு வெளியேறும்போது மாணவர்கள் தங்கள் மேசையையும் நாற்காலியையும் சுத்தம் செய்கிறார்கள்.  கிருமிநாசினி உபகரணங்கள் அவர்களுக்கு கிடைக்கின்றன;
- ஒரு நாளைக்கு இரண்டு முறையாவது குப்பைகளை காலி செய்கிறார்கள்;
- கழுவவோ கிருமி நீக்கம் செய்யவோ முடியாத எந்தவொரு பொருளும் அகற்றப்படும்;
- தரைகள் ஒரு நாளைக்கு ஒரு முறை ஊழியர்களால் சுத்தம் செய்யப்படுகின்றன.

மேலும் தகவல்:

- Décision n°174 (PDF, 512 Ko): நேருக்கு நேர் கற்பித்தல் மற்றும் பரீட்சைகளை ஆகஸ்ட் 10, 2020 முதல் இரண்டாம் நிலை அளவில் ( இரண்டாம் நிலை II இன் கன்டோனல் பாதுகாப்பு திட்டம் 2 - COVID-19) மீண்டும் தொடங்குவதற்கான கட்டமைப்பிற்குள் சுகாதார மற்றும் நிறுவன நடவடிக்கைகளைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள். “

## பள்ளி சிற்றுண்டிச்சாலைகளில் மற்றும் உணவகங்களில் உணவு முறைகள் எப்படி இருக்கின்றன?

தனிநபர்களின் ஒவ்வொரு குழுவிற்கும் இடையில் குறைந்தபட்சம் 1.5 மீட்டர் தூரத்திலுள்ள சமூக மற்றும் இடஞ்சார்ந்த தூரத்தை கடைப் பிடித்தவாறு, ஆறு பேர் வரை குழுக்களாக உணவு எடுத்துக் கொள்ளலாம். பதிவுகள் முன்கூட்டியே செய்யப்படுகின்றன மற்றும் குழு அமைப்பு அறிவிக்கப்படுகிறது மற்றும் தடமறிதல் காரணமாக, இதை மாற்ற முடியாது. குழு உறுப்பினர்கள் தங்கள் மேஜையில் அமர்ந்திருக்கும் வரை முகமூடி அணிவது அவசியமில்லை. ஒரு நபர் மேஜையை விட்டு வெளியேறியவுடன் அவருக்கு அது மீண்டும் கட்டாயமாகும். மற்றவர்கள் அணுகுவதற்கு அனுமதிக்கும் திறந்து வைக்கப்பட்டுள்ள தாம்பாளங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன. தொழில் வல்லுநர்களும் மாணவர்களும் உணவுகளை பரிமாறிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்கிறார்கள், உணவைப் பகிர்ந்து கொள்ளக் கூடாது.

மேலும் தகவல்:

- Décision n°174 (PDF, 414 Ko): நேருக்கு நேர் கற்பித்தல் மற்றும் பரீட்சைகளை ஆகஸ்ட் 10, 2020 முதல் இரண்டாம் நிலை அளவில் ( இரண்டாம் நிலை II இன் கன்டோனல் பாதுகாப்பு திட்டம் 2 - COVID-19) மீண்டும் தொடங்குவதற்கான கட்டமைப்பிற்குள் சுகாதார மற்றும் நிறுவன நடவடிக்கைகளைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள். “

Département de la formation,
de la jeunesse et de la culture

## மேற்படிப்பு பயிற்சி பெறும் ஒரு இளைஞர் அல்லது ஒரு பயிற்சி கொடுக்கும் நிபுணருக்கு அறிகுறிகள் இருந்தால் என்ன செய்வது?

அறிகுறி ஏற்பட்டால் (கன்டோனல் மருத்துவரின் கேள்விகளைப் பார்க்கவும் FAQ du Médecin cantonal), lணவர் அல்லது பயிற்சி நிபுணர் இவ்வாறு நடந்துக்க கொள்ளவேண்டும்:

- வகுப்பறையை விட்டு வெளியேறுகிறார்;
- தனது சொந்த செலவில் தனது வீட்டிற்குத் திரும்புகிறார்;
- ஒரு கொரோனா பரிசோதனை CoronaCheck செய்து, முடிவைப் பொறுத்து, ஒரு COVID-19 சோதனை இடத்திற்குச் செல்கிறார் அல்லது தனக்கு வைத்தியம் பார்க்கும் மருத்துவரைத் தொடர்பு கொள்கிறார்.

மருத்துவ இரகசியத்தன்மைக்கு மதிப்பளிப்பதன் மூலம் ஒரு மாணவர் அல்லது ஆசிரியர் பரிசோதனையின் முடிவு பள்ளிக்கு அனுப்பப்படுவதில்லை. அறிகுறிகள் (தனிமைப்படுத்தல்) மற்றும் நேர்மறையான COVID-19 சோதனை (தடமறிதல்) ஏற்பட்டால் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளின் விவரங்கள் முடிவு 174 இல் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன.

மேலும் தகவல்:

- Décision n°174 (PDF, 414 Ko): நேருக்கு நேர் கற்பித்தல் மற்றும் பரீட்சைகளை ஆகஸ்ட் 10, 2020 முதல் இரண்டாம் நிலை அளவில் ( இரண்டாம் நிலை II இன் கன்டோனல் பாதுகாப்பு திட்டம் 2 - COVID-19) மீண்டும் தொடங்குவதற்கான கட்டமைப்பிற்குள் சுகாதார மற்றும் நிறுவன நடவடிக்கைகளைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள். “

## ஆபத்து உள்ள நாட்டிலிருந்து திரும்பும்போது என்ன நடத்தையை பின்பற்ற வேண்டும்?

கூட்டிணையரசுகளால்  "ஆபத்துள்ளது " என வகைப்படுத்தப்பட்ட ஒரு பகுதிக்கு அல்லது ஒரு நாட்டிற்கு பயணம் செய்து திரும்பும் மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாக மற்றும் தொழில்நுட்ப ஊழியர்கள் எஃப் ஓ பி ஹுFOPH) வழங்கிய அறிவுறுத்தல்களை மிகக் கண்டிப்பாக பின்பற்றுகிறார்கள் (ஆபத்திலிருக்கும் நாடுகளின் பட்டியல் மற்றும் www.bag.admin.chஇன் கீழ் பின்பற்றப்பட வேண்டிய செயல்முறை).. அவர்கள் தங்களைத் தாங்களே தனிமைப்படுத்திக் கொள்கிறார்கள், கன்டோனல் மருத்துவரைத் தொடர்புகொண்டு, இந்த தனிமைப்படுத்தல் முடிவடையும் வரை அவர்கள் தங்கள் நிறுவனத்திற்குத் திரும்புவதில்லை, பின்னர் அவர்கள் எந்த அறிகுறிகளையும் காட்டாவிட்டால் மட்டுமே திரும்புகிறார்கள். ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகள் தனிமைப்படுத்தலின் காரணமாக மாணவர்கள் பள்ளிக்கு வராவிட்டால் அபராதம் விதிக்க மாட்டார்கள்.

மேலும் தகவல்:

- Décision n°174 (PDF, 512 Ko): நேருக்கு நேர் கற்பித்தல் மற்றும் பரீட்சைகளை ஆகஸ்ட் 10, 2020  முதல் இரண்டாம் நிலை அளவில் ( இரண்டாம் நிலை II இன் கன்டோனல் பாதுகாப்பு திட்டம் 2 - COVID-19) மீண்டும் தொடங்குவதற்கான கட்டமைப்பிற்குள் சுகாதார மற்றும் நிறுவன நடவடிக்கைகளைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள். “

## சுவிட்சர்லாந்தில் வகுப்பு பயணங்கள் (முகாம்கள் மற்றும் பள்ளி பயணங்கள்)  2020-2021இல் தொடர்ந்து நடைபெறுகின்றனவா?

இந்த நடவடிக்கைகள் சுவிட்சர்லாந்தில் மட்டும் நடைபெற்றால்  இவை நடைபெறுகின்றன.  தங்கள் மாணவர்களுடன் ஆய்வு பயணங்களை ஏற்பாடு செய்யவிருக்கும் வவுட்டின்  ஆசிரியர்கள், நீடித்து நிற்கும்ஆய்வு பயணங்களுக்கான வழிகாட்டியை அணுகலாம்; இதன் மூலம்  சேவைகள் மற்றும் பயன்களுக்கான யோசனைகளை (போக்குவரத்து, தங்குமிடம், நடவடிக்கைகள்) ஒன்றாகக் கொண்டு வரப்படுகின்றன.

மேலும் தகவல்:

- Guide des voyages d'études durables

## வெளிநாட்டு பயணங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றனவா?

வெளிநாட்டுஆய்வுப் பயணங்கள், முகாம்கள் மற்றும் வெளிநாடுகளில் பிற பயணங்களுக்கு 2020-2021ஆம் ஆண்டில் அனுமதி இல்லை. விமானப் பயணம் தவிர வேறேதேனும் போக்குவரத்துச் சாதனம் பயன்படுத்தினால், 2021-2022 கல்வி ஆண்டிலிருந்து பயணங்களுக்கு ஐரோப்பிய இடங்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம்.

## எனது நிலையை அல்லது என்னைச் சுற்றியுள்ளவர்களின் நிலையை நான் எவ்வாறு மதிப்பிட முடியும்?

கொரோனாசெக் CoronaCheck என்பது உங்களுக்கு அல்லது உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கு நிகழ இருக்கும் அபாயத்தை விரைவாக மதிப்பிடுவதற்கும் என்ன செய்வது என்று தெரிந்து கொள்வதற்குமான ஒரு கருவியாகும் https://coronavirus.unisante.ch/).

## பள்ளி ஆண்டின் தொடக்கத்திற்காக மே 11 அன்று தொடங்கப்பட்ட கொரோனா குவெஸ்ட் வீடியோ கேம், இது எதற்காக?

கொரோனா க்வெஸ்ட் ஒரு தீவிர விளையாட்டு. மாணவர்களிடையே "தடை சைகைகளை" கற்றுக் கொள்வதும் பலப்படுத்துவதும் இதன் குறிக்கோள், ஆனால் "ஒன்றாக வாழ்வது", சகாக்களுக்கு உதவுதல் போன்றவையும் கூட. மாணவர்கள்

மற்றும் ஆசிரியர்கள் முன்மொழியப்பட்ட அட்டைகளுடன் 2020-2021 பள்ளி ஆண்டுக்கு ஒரு புதிய லீக் உருவாக்கப்பட்டுள்ளது. இது 10 மொழிகளில் கிடைக்கிறது, இந்த இலவச ஆன்லைன் விளையாட்டு 1 முதல் 11 பி (1-11P)வரை யுள்ளவர்களுக்கு வழங்கப்பட்டு , பலசெயல்பாடுகளை விவரிக்கும் கல்வித் தாளுடன் fiche pédagogique வருகிறது. இது பள்ளியில் அல்லது வெளியே இருக்கும் போது, நண்பர்கள் அல்லது குடும்பத்தினருடன், ஸ்மார்ட்போன்கள், டேப்லெட்டுகள் மற்றும் கணினிகளில் இயக்கி விளையாடலாம் . ஒரு விளையாட்டைத் தொடங்க, www.coronaquest.gameஇற்குச் செல்லவும்.

மேலும் தகவல்:

- Vidéo de présentation

## மேலும் அறிந்துகொள்ள

OFSP (பொது சுகாதார கூட்டாட்சி அலுவலகம்) யின் ஆலோசனை) conseils de l’OFSP நிகழ்நேரத்தில் புதுப்பிக்கப்பட்டது, மற்றும் கொரோனா வைரஸ் தகவல் வரி: +41 58 463 00 00 (தினசரி, 24 மணி நேரமும்).

கொரோனா வைரஸ் தொடர்பான மக்களிடமிருந்து வரும் அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்கும் நோக்கம் கொண்ட கன்டோனல் ஹாட்லைன்: 0800 316 800 (தினசரி காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை).

படிப்படியாக முன்னேறிக்கொண்டிருக்கும் நிலைமையை பின்பற்ற, மற்றும் உங்கள் கேள்விகளுக்கான பதில்களைப் பெற www.vd.ch/coronavirus மற்றும் பயிற்சி தளத்தின் வலைத்தளத்திற்குச் செல்லவும்.